**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.44/2024 – PW-10**

| | |
|---|---|
| Name | திருமதி. நிவேதிதா |
| Husband/Father Name | சங்கர் |
| Village /Area | அரக்கோணம் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | அரசு மருத்துவர் |
| Age | 54 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 07.08.2025.

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் தற்போது அரக்கோணம் அரசு மருத்துவமனையில் முதன்மை மருத்துவ அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். 15.10.2015 அன்று இரவு 07.40 மணியளவில் நான் பணியில் இருந்த போது திரு. ராம்குமார், த/பெ.சண்முகம் என்பவரை ே ஹம்நாத், அன்பரசு என்பவர்கள் அழைத்து வந்தார்கள் அவரை பரிசோதனை செய்த போது இராம்குமார் இறந்த நிலையில் இருந்தார். அவருடைய கருவிழி விரிவடைந்த நிலையில் இருந்தது. இதய துடிப்பு எதுவும் இல்லை. முச்சின்றி இருந்தார். தலை முழுவதும் காயங்கள் காணப்பட்டது. வலது ஆள்காட்டி விரலில் வெட்டு இருந்தது. பிரேதத்தை சவக்கிடங்கிற்கு அனுப்பி வைத்தேன். அன்றைய தினமே இரவு 07.35 மணியளவில் அன்பவரசு, 26 வயது த/பெ.சோமு ே ஹம்நாத் என்பவரை சிகிச்சைக்காக அழைத்து வந்தார். History of assault விவரங்கள் தெரியவில்லை. 15.10.2015 அவரை பரிசோதனை செய்த போது அவர்

மயக்க நிலையில் இருந்தார் கீழ் கண்ட காயங்கள் காணப்பட்டது. 1. முன் நெற்றியில் ஒரு கிழிந்த காயம், முன் நெற்றியில் உள்ள எலும்பு முறிந்து இருக்கலாம் என்றும், 2. பின் மண்டையில் ஒரு கிழிந்த காயம் 3 x 1 x 1 செமீ அளவிருக்கும், 3. வலது முன் கையில் ஒரு கிழிந்த காயம் 4 x 2 x 2 செமீ அளவிருக்கும் சதை நார் கிழிந்த நிலையில் இருந்தது, அவரை சிகிச்சை அளித்து மேல் சிசிக்சைக்காக சென்னை இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தேன். நோயாளிக்கு சிகிச்கை அளித்த விவரம் எதுவும் சமர்பிக்கப்படவில்லை. அதனால் என்னால் காயத்தின் தன்மை பற்றி கருத்துரை வழங்க இயலவில்லை. என்னால் வழங்கப்பட்ட காயச்சான்றுகள் முறையே அதசா.3 மற்றும் அதசா.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>** இல்லை.

**(ஒம்./–) திருமதி.கே.எஸ்.ஜெயமங்களம்,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**அரக்கோணம்.**